சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர் நலம் – கல்வி – அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலைமற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையும் இன்றி இலவசக் கல்வித் திட்டத்தினை 2009–2010 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந2)த் துறை.

அரசாணை (நிலை) எண். 73

நாள். 24.8.2009.

திருவள்ளுவர் ஆண்டு 2037,
விரோதி, ஆவணி 8

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.658, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவு திட்டம் மற்றும் சமூக நலத்துறை, நாள். 25.7.1989.
2. அரசாணை (நிலை) எண்.82, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள். 26.4.1990.
3. பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கடித எண்.டி1/4782/2007, நாள். 5.6.07.
4. அரசாணை (நிலை) எண். 389, உயர்கல்வித் துறை, நாள் 4.12.2007.
5. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் கடித எண். டி1/4782/2007, நாள். 1.7.09.

* * * *

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பட்டப்படிப்பு வரை வருமான வரம்பின்றி இலவசக் கல்வி அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு 1990–91 ஆம் கல்வி ஆண்டு முதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற கட்டாயக் கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்துவதிலிருந்து விலக்களித்து இலவசக் கல்வி வழங்குவதற்கான ஆணை மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பிறப்பிக்கப்பட்டது:-

(1) பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவரின் பெற்றோரோ அல்லது உடன் பிறந்தவர்களோ அந்த குடும்பத்தில் இதுவரையில் யாரும் பல்கலைக்கழகப் பட்டம் பெறாதவர்களாக இருக்க வேண்டும்.

(2) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000/– அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(3) சலுகை பெறுபவர் அந்தக் குடும்பத்தைச் சார்ந்த இளங்கலை பட்டப் படிப்பு பயில இருக்கும் முதல் மாணவராக இருக்க வேண்டும்.

3. தற்போது மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியரைப் பொருத்தவரை இலவசக் கல்வித் திட்டம் எவ்வித நிபந்தனைகளுமின்றியும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியரைப் பொறுத்தவரை பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/– க்குள் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் செயல்படுத்தப்படுகிறது.

4. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப் படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர் அனைவருக்கும் எவ்வித நிபந்தனையுமின்றி சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களித்து இலவசக் கல்வித்திட்டத்தினை செயல்படுத்த அரசின் ஆணைகளைப் பெற்றுத் தருமாறு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. 2007–08 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரியில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் கல்விக் கட்டணத்தை இரத்து செய்து நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

6. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் தற்போது அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர் 98, 265 பேர் மூன்றாண்டு பட்டப்படிப்பில் பயின்று வருகின்றனர் என்றும், இவர்களில் 59,190 மாணவ, மாணவியர்களுக்கு 2008–09 ஆம் ஆண்டில் இலவசக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் 19, 537 மாணவ, மாணவியர் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர் என்றும், 19,538 மாணவ, மாணவியர் எவ்வித உதவித் தொகையும் பெறவில்லை என்றும் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ மாணவியருக்கு எவ்வித நிபந்தனையும் இன்றி இலவசக் கல்வி உதவித் தொகை வழங்கினால், எவ்வித உதவித் தொகையும் பெறாத 19, 538 பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் 19, 537 மாணவ, மாணவியருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்பட வேண்டியிருக்கும் என்றும், இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 370.83 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

7. 8.7.2009 அன்று நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களில் நிபந்தனைகளின் காரணமாக இலவசக் கல்வி பெற இயலாத 39,075 பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கும் இலவசக் கல்வி திட்டத்தினை நடப்பு கல்வி ஆண்டு முதல் விரிவுபடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

8. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் இப்பொருள் குறித்து விரிவாக பரிசீலித்த அரசு, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு செயல்படுத்துவதைப் போன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கும் 2009–2010 ஆம் கல்வியாண்டு முதல் எவ்வித நிபந்தனையும் இன்றி இலவசக் கல்வித் திட்டத்தினை செயல்படுத்த ஆணையிடுகிறது.

9. பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையும் இன்றி இலவசக் கல்வித் திட்டத்தினை செயல்படுத்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினமாக கணக்கிடப்பட்டுள்ள தொகை ரூ. 370.83 இலட்சத்தினை பல்வேறு கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் நடப்பாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வரவு–செலவு திட்டத்திற்குள் மேற்கொள்ள வேண்டும் என்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

10. இவ்வாணை நிதித்துறை அ. சா. எண். 48165/BC,MBC/09, நாள் 18.8.09–ன் படி அத்துறை இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. நா. இராமநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம்,
சென்னை –5.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை –5
மாநிலக் கணக்காயர், சென்னை –18/ (பெயரில்)
மாநிலக் கணக்காயர், (தணிக்கை –I) சென்னை –18/ (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை – 6/ (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –5.

நகல்:

நிதி (பி,மிபி)த் துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உ ।ரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.